# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 19 புதன்கிழமை 05.11.2025 கதிர் 361







# மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகுமா?



வவுனியா, நவ. 05

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் அதற்கு இணங்கி வந்தால் மட்டும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட முடியும்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று நடைபெற்ற பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் காலை 10 மணியிலிருந்து மாலை வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலே விசேடமாக வரப் போகின்ற வரவு - செலவுத் திட்டம் சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஒரு கலந்துரையாடல் நடத்தியிருக்கின்றோம்.

எதிர்வரும் 7ஆம் திகதி ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற வகையில் தன்னுடைய வரவு - செலவுத் திட்ட யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றார். அதற்குப் பிறகு இரண்டாம் 7

# சஜித் - ஜெய்சங்கர் டில்லியில் சந்திப்பு

## சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் பேச்சு



புதுடில்லி, நவ. 05

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை இன்று சந்தித்தார்.

புதுடில்லியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.


இந்திய - இலங்கை கூட்டாண்மை, பிராந்திய ஸ்திரத்தன்மை, தொடர்புகள் மற்றும் பரஸ்பர முன்னேற்றம் தொடர்பில் இரு தரப்பினரின் அர்ப்பணிப்புகள் குறித்தும் பல கருத்துக்களை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டுமொரு முறை மீண்டெழுந்து நிற்பதற்குத் தேவையான பயன்பெறும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை இந்தியாவிடமிருந்து பெற்றுத் தந்தமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் நன்றி தெரிவித்தார். இலங்கையின் நீண்டகால பொருளாதார மறுமலர்ச்சியைத் திட்டமிடுவதற்காக இன்றைய காலத்தைப் பயன்படுத்துவது குறித்து பல கருத்துக்களை கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இதன்போது முன்வைத்தார்.

இலங்கைப் பொருளாதாரத்தில் கண்டு வரும் முன்னேற்றங்கள், தொடர்ச்சியாக நடந்து வரும் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் நிலைத்தன்மையைப் பேணுவதற்கான திட்ட வரைபடம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கு இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளித்தார். 7

## வவுனியாவில் நேற்று

# மனைவியைப் படுகொலை செய்த கணவர் ஏறாவூர் பொலிஸில் குழந்தையுடன் சரண்!



வவுனியா, நவ. 05

வவுனியாவில் மனைவியைக் கொலை செய்துவிட்டு இரண்டு வயது பெண் குழந்தையுடன் தலைமறைவான கணவர், ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தனது குழந்தையுடன் சரணடைந்துள்ளார்.

வவுனியா, பூம்புகார் பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலத்தை நேற்று மாலை பொலிஸார் மீட்டனர்.

மேற்படி பெண் அவரது கணவர் மற்றும் பெண் குழந்தையுடன் நேற்றுக் காலை வீட்டில் 7

# குளவித் தாக்குதலுக்கு இலக்கான 12 மாணவர்கள் வைத்தியசாலையில்



வவுனியா, நவ. 05

வவுனியாவில் 12 மாணவர்கள் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மேற்படி மாணவர்கள் வவுனியா வடக்கு ஒலுமடு மகா வித்தியாலத்துக்குச் சென்ற நிலையில் 7

# கொழுந்து அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி தொழிலாளி பலி!

## மஸ்கெலியாவில் துயரம்

மஸ்கெலியா, நவ. 05

மஸ்கெலியா, மவுசாகலை தோட்ட தேயிலை தொழிற்சாலையில் இன்று அதிகாலை கொழுந்து அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி, தொழிலாளி ஒருவர் பலியாகியுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான கிட்ணன் விஜயகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் ஹட்டன் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்திற்கு வருகை தந்து ஆராய்ந்த பிறகு , சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதே எமது ஒரே கோரிக்கை



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விரட்டியடித்து மீண்டும் ராஜபக்ஸ குடும்பத்தை ஆட்சிக்குக் கொண்டுவரவோ, ரணில்விக்ரமசிங்கவை ஆட்சிக்குக் கொண்டுவரவோ எமக்குத் தேவையில்லை. எமது கோரிக்கை மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதே. இதுவே எமது ஒரே கோரிக்கை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

உகண்டாவில் ராஜபக்ஸ குடும்பத்தினர் கொள்ளையடித்த 18 பில்லியன் டொலர்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. அவற்றில் ஒரு பகுதியை இந்நாட்டுக்குக் கொண்டுவந்தாலே பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளுக்கு நேற்று மாலை விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், மக்களுடனான சந்திப்புகளை மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட சீலாமுனைப் பகுதியில் மாநகரசபை உறுப்பினர் நடராசா சுதர்ஷன் தலைமையில் நடைபெற்ற சந்திப்பில், மாநகரசபையின் பிரதி முதல்வர் டினேஸ் உள்ளிட்ட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சீலாமுனை மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. மழைகாலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் வெள்ளம் ஏற்படாமல் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக் கப்பட்டது.

மட்டக்களப்பு வாவியோரமாக மழைகாலங்களில் வெள்ளநீர் புகுவதால் சீலாமுனை கடுமையாகப் பாதிக்கப்படுவது தொடர்பிலும், வெள்ளநீர் புகாமல் தடுப்பதற்காக வெள்ளநீர்த் தடுப்பு அணைக்கட்டு ஒன்றைக் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மை கருதி சனசமூக நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. (ஐ)

# அனுர எனக்கு நல்ல நண்பர்! – கூட்டு எதிர்க்கட்சியின் பேரணியில் எமது கட்சி பங்கேற்காது! மனோ கணேசன் திட்டவட்டம்



நவம்பர் 21 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சி பேரணியில் தனது கட்சி பங்கேற்காது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய மனோ கணேசன்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடனான பிரச்சினைகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்ற கருத்துக்களை மறுத்த மனோ கணேசன், எந்த அரசியல்வாதிகளுடனும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் (ளுதுடீ) முடிவு குறித்து தனக்கு உறுதியாக தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகரவின் தோளைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் அனைவரும் நல்ல நண்பர்கள் என்று கூறிய மனோ கணேசன், "அனுரவும் எனக்கு நல்ல நண்பர்" என்று தெரிவித்துள்ளார். (ஐ)



# ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு சோக அறிவிப்பையே வெளியிட நேரிடும் – பொன்சேகா காட்டம்

கொழும்பு, நவ.5

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு சோக அறிவிப்பையே வெளியிட நேரிடும். மக்களுக்கு தற்போதிருக்கும் வாழ்க்கையும் இல்லாமல் போய்விடும். அவர்களின் ஆட்சியை வெறுக்கிறேன் என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார். தற்போதைய எதிர்க்கட்சியினருக்கு மீண்டும் ஆட்சி கிடைக்கக் கூடாது என்று பிரார்த்திப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற கோணத்திலேயே பார்க்க முடியாது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் தனியாக இயங்குகிறது. பாதாளக் குழுக்கள் எல்லாம் அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பிட்டவையாகும்.



இருந்தபோதும், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை ஒழிப்பதற்காக அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுகிறது என்பதை நான் பயமின்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக இடம்பெறுகிறது என்பது வெளிப்படையாக தெரியவில்லை. இருந்தபோதும் அரசாங்கத்தின் முயற்சிகளை வரவேற்க வேண்டும். ஒருசில எதிர்க் கட்சியினர் அதிர்ச்சியில் இருக்கிறார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே எதிர்க் கட்சிகளிடமிருந்து விலகி தனித்து செயற்பட ஆரம்பித்து விட்டேன். 15 வருடங்கள் அவர்களுடன் இருந்திருக்கிறேன்.

அவர்களின் செயற்பாடுகளினால் நாட்டுக்கு எந்த பயனும் இல்லை என்பதை புரிந்துகொண்டதாலேயே அவர்களிடமிலுருந்து விலகி வந்தேன். அதனால், மீண்டும் அவர்களுடன் இணைந்துகொள்ளுமளவுக்க நான் முட்டாளும் இல்லை.

ஒருவேளைஇ ராஜபக்ஷக்கள் ஆட்சி வந்தால் நாட்டுக்கு சோக அறிவிப்பே வெளியிட நேரிடும். மக்களுக்கு தற்போதிருக்கும் வாழ்க்கையும் இல்லாமல் போயிவிடும். ராஜபக்ஷக்களின் ஆட்சி மீது கோபம் எதுவும் இல்லை. அவர்களின் ஆட்சியை வெறுக்கிறேன் என தெரிவித்துள்ளார். (ஐ)

# அரச ஊழியர்கள் விதிமுறைகளின்படி செயல்பட வேண்டும் - வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு!



கொழும்பு, நவ.5

அரச ஊழியர்கள் அரச சுற்றுநிருபம் மற்றும் நிதி அமைச்சின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அரச ஊழியர்கள் செயற்படவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் விசாரணை பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டு, கொழும்பு புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த முன்னாள் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் சரித்த ரத்வத்தேயின் வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

சரித்த ரத்வத்தே 1980 காலப்பகுதியில் நாட்டில் இளைஞர் சேவை மன்றத்தை ஏற்படுத்துவதற்கும் அதனை முறையாக நாட்டுக்கு பிரயோனமானமுறையில் மேற்கொள்ளவும் அதற்கு தலைமைத்துவம் வழங்கிய அரச அதிகாரியாகவே அவரை நாங்கள் அறிந்திருக்கிறோம்.

அதேபோன்று அவர் 2001 காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரதம் வீழ்ச்சியடைந்திருந்த சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சின் செயலாளராக இருந்து பாரிய சேவையை மேற்கொண்டு பொருதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுத்த அதிகாரியாவகவே நாங்கள் அறிந்திருந்திருக்கிறோம்.

அதேபோன்று 1988 காலப்பகுதியில் ஜனசவிய திட்டத்தை ஆரம்பிக்கும்போதும். அதற்காகவும் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதிக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கிய அரச அதிகாரியாகவே நாங்கள் அறிந்திருந்திருக்கிறோம்.

மேலும் நாங்கள நாட்டில் மிகவும் சிந்தனையுடனடே நாட்டில் செயற்படவேண்டி இருக்கிறது. அரச அதிகாரிகள் எடுக்கும் தீர்மானங்களின்போது அரசாங்கத்துக்கு லாபம் ஏற்பட்டால் நாங்கள் நன்றி கூறுவதில்லை. அவ்வாறு இல்லாவிட்டால், அரசாங்கத்துக்கு நன்மை பயக்கும் சந்தர்ப்பங்களில் அதில் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில்லை.

உண்மையாக எடுக்கும் தீர்மானங்களினால் ஏற்படும் நட்டம் தொடர்பில் பொது நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் நிதி அமைச்சின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அரச ஊழியர்கள் செயற்படவேண்டும் என்றே முன்னாள் பொது நிர்வாக அமைச்சர் என்றவகையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக குற்றச்செயல் சந்தர்ப்பம் பதவிர வேறு சந்தர்ப்பங்களில் அரச ஊழியர்கள் மிகவும் உணர்வுமிக்க நபர்கள் என்பதால், மிகவும் அவதானமாக செயற்படவேண்டும் என்பதையே இந்த சந்தரப்பத்தில் நினைவுபடுத்திக்கொள்கிறேன் என்றார். (ஐ)

# எதிர்க்கட்சி எம்.பி.க்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை

*கொழும்பு, நவ.5*

*நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுவரும் நிலையில், முன்னர் ஆட்சியிலிருந்தவர்கள் பாதுகாப்பினை கோருகின்றனர் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*எந்தவொரு பிரஜைக்கும் தனது பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை காணப்படுமாயின், பொலிஸாருக்கு அது குறித்து அறிவிக்க முடியும்.*

*அதற்கமைய பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் மதிப்பாய்வுக்கமைய பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு கோரியுள்ளதாக செய்திகள் மூலம் அறியக்கிடைத்தது.*

*எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாதுகாப்பிற்காக பிஸ்டர் ரக துப்பாக்கியைக் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது. அது குறித்து பொலிஸாரால் மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மதிப்பாய்வின் நிறைவில் பொலிஸாரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போது நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. அவர்களுக்கிடையில் துப்பாக்கிச்சூட்டு சண்டைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.*

*இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் முன்னர் ஆட்சியிலிருந்தவர்கள் பாதுகாப்பினை கோருகின்ற நிலையில், பொலிஸார் அது குறித்து அவதானம் செலுத்துவர்.*

*ஆனால் எமக்கு துப்பாக்கிகள் தேவையில்லை. ஆளுங்கட்சியில் எவரும் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸில் முறைப்பாடளிக்கவுமில்லை என தெரிவித்தார். (ஐ)*

# 12 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு கைபேசி தடை விதிக்க ஆலோசனை

இலங்கையில் 12 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் கைபேசி பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக முன்மொழியப்பட்ட யோசனைகள் தற்போது ஆலோசனை மட்டத்திலேயே இருப்பதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க கலந்துரையாடல் தேவைப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை குறித்து அரசாங்கத்திற்குள் இதுவரை உத்தியோகபூர்வ கலந்துரையாடல் எதுவும் நடைபெறவில்லை என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார்.

“நாங்கள் இன்னும் எதையும் விவாதிக்கவில்லை. இது ஒரு கருத்து மட்டுமே. இதைச் செய்ய வேண்டுமானால், நீதி அமைச்சு போன்ற பிற அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்து செய்யப்பட வேண்டும்,” என்று அவர் கூறினார்.

சில நாடுகள் ஏற்கனவே இத்தகைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாக, 12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருப்பதையோ அல்லது பயன்படுத்துவதையோ தடுக்கும் ஒரு தடையை அரசாங்கம் அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் அறிவித்திருந்தார்.

இந்த முன்மொழிவு, சிறுவர்களை பகிரப்பட்ட திரையில் அதிக நேரம் செலவழிப்பதில் இருந்தும், தீங்கு விளைவிக்கும் இணைய உள்ளடக்கத்திற்கு ஆளாவதில் இருந்தும் பாதுகாப்பதையும், ஆரோக்கியமான சமூக தொடர்புகளையும் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறியிருந்தார்.’ (ஐ)

# 49 ஆவது நாளாகவும் தொடரும் சத்தியாக் கிரக போராட்டம்



திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் தொடர் சத்தியாக் கிரக போராட்டமானது செவ்வாய்க்கிழமை (04) அன்று 49 வது நாளாக திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக தொடர்ந்தது.

தங்களது விவசாய நிலத்தை அபகரித்து தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் உற்பத்திக்காக வழங்கப்பட்டதையடுத்து இந்த சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி செயலகம் தொடக்கம் பிரதமர் அலுவலகம் வரை போராட்டங்களை நடாத்தியும் உரிய காலப் பகுதிக்குள் தீர்வை தருவதாக பிரதமர் கூறிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை பிரதமரால் வழங்கிய கால அவகாசமும் முடிவுற்றுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் அநுர அரசாங்கம் விவசாயிகளை எவ்வாறு வழி நடத்துவது தங்களுக்கு கவலையளிப்பதாக முத்து நகர் விவசாயிகள் கூறுகின்றனர்

மேலும் “அபகரிக்கப்பட்ட விவசாய நிலத்தை மீள பெற்றுத் தாருங்கள் ” என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஈழத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்!



ஈழத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதஹ்வாது இலங்கையில் இருந்து 1983-ம் ஆண்டு ஈழத் தமிழர்கள் அங்கு நடந்த போர் சூழல் காரணமாக சொத்துகளை இழந்து தமிழ் மண்ணுக்கு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் குடியேறினர். அதற்குப் பிறகும், பல்வேறு காலகட்டங்களிலும், குறிப்பாக, 2009- வரை பல்லாயிரக்கணக்கான ஈழ தமிழர்கள் தமிழகத்துக்கு அடைக்களம் வந்தனர். கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஈழத் தமிழர்கள் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தமிழகத்திலுள்ள 116 முகாம்களில் வசிக்கின்றனர். பல ஆண்டுகள் இவர்கள் இங்கு வாழ்ந்தாலும் இந்திய மக்களை போல சுதந்திரமாக வாழ முடியாத சூழல் இன்றும் நிலவுகிறது.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்த ஒரு தலைமுறையினரின் அடுத்த தலைமுறை பிள்ளைகள் இங்குதான் பிறந்தார்கள். இவர்களில் பலர் பள்ளிப் படிப்பை முடித்தும், சிலர் பட்டப் படிப்பையும் முடித்து உள்ளனர். ஆனால் எந்த படிப்பு படித்தாலும் அவர்கள் அரசு பணிகளில் தேர்வு செய்ய முடியாத அளவிற்கு சட்டங்கள் உள்ளன. அரசின் மூலம் தருகின்ற சிறிய தொகை மற்றும் அன்றாட கூலிகளாக வேலை செய்து தங்களது வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றனர்.

இவர்களுக்கு அரசின் பல சலுகைகளும் கிடைப்பதில்லை. அரசு வேலைகளில் நேபாளம், பூடான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லாம் விண்ணப்பிக்கலாம் என்கிறார்கள் வரையறை இருக்கும்போது. நம் தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகிறது. அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் இடத்தில்தான் அவர்கள் வீடு கட்டிக் கொள்ள முடியும். அவர்கள் அகதிகளாக வந்த போது ஒதுக்கப்பட்ட அதே அளவுதான் தற்போது வரை அவர்களுக்கு உள்ளது. தற்போது அவர்களின் குடும்ப பெருக்கத்தினால் அவர்கள் பிள்ளைகளுக்கு திருமணமாகி பிள்ளைகளும் பிறந்திருப்பார்கள். அரசு கொடுத்த அதே அளவு இடத்தில் எப்படி அவர்கள் குடும்பமாக வாழ முடியும்.

இலங்கையில் அவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு விட்டது. அங்கு சென்றாலும் வாழ முடியாது என்பதால் தான் இங்கேயே நிரந்தரமாக இருக்க விரும்புகிறார்கள். அப்படியும் இங்கு நிரந்தரமாக வசிக்க முடியாத பட்சத்தில் சிலர் கனடா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சித்தால், அந்த நாடுகளே ஏற்றுக்கொண்டாலும் இந்தியா அனுப்ப மறுக்கிறது. ஐ.நா.வில் அகதிகளுக்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பமிடவில்லை. அதனால், ஐ.நா.வும் அகதிகளுக்கான உதவியை இந்தியாவில் செய்ய முடியவில்லை.

ஈழத்தமிழர்கள் அத்துமீறிக் குடியேறிவர்கள் இல்லை. போர்க் காலங்களில் உயிரைக் காக்க இந்தியாவை நம்பி வாழ வந்தவர்கள். தற்போது உயிரோடு வாழ்கிறார்களே தவிர அவர்கள் உரிமைகள் பெற்று சுதந்திரமாக வாழவில்லை. உலகின் பல நாடுகள் ஈழத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளன. இந்தியாவில்தான் ஈழத்தமிழ் மக்கள் அகதி முகாம்களிலேயே ஆயுள் முழுதும் வாழ்ந்து முடிக்கிறார்கள். முந்தைய தலைமுறை தான் அப்படியான வாழ்வை வாழ்ந்தாலும், தற்போதைய தலைமுறையாவது சுதந்திரமாக வாழ வேண்டும்.

அதற்கு முதல் கட்டமாக தமிழ்நாட்டில் தற்போது தொடங்கவுள்ள தீவிர வாக்காளர் திருத்த பணியின்போது தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் பெயரில் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுப் பெற வேண்டும். மத்திய அரசும் ஈழத் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாக்குரிமை அளிக்கப்பட்டால்தான் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக அந்தந்த பகுதி மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றுவார்கள். ஆகவே இவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டியது அவசியம் ஆகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பீகாரிலும், ஒடிசாவிலும் தமிழர்களுக்கு எதிராக அவதூறு பேசும் மோடி: சீமான் குற்றச்சாட்டு




பீகாரிலும், ஒடிசாவிலும் பிரதமர் மோடி தமிழர்களுக்கு எதிராக அவதுறாக பேசி வருவதாக சீமான் குற்றம்சாட்டியுள்ளார். திருச்சி விமான நிலையத்தில் நேற்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் வடமாநிலத்தவர் அதிகம் உள்ளனர். தமிழ்நாடு இன்னொரு பீகாராக மாறி வருகிறது. பீகாரிலும், ஒடிசாவிலும் பிரதமர் மோடி தமிழர்களுக்கு எதிராக அவதூறாக பேசி வருகிறார்.

தமிழ்நாட்டில் கட்சிகளுக்கு இடையே போட்டியில்லை. கருத்தியல் போட்டி தான் நிலவுகிறது. ஒருவர் இரு மொழி கொள்கை என்கிறார். மற்றொருவர் மும்மொழி கொள்கை என்கிறார். ஆனால் நாங்கள் ஒரே கொள்கை. தமிழ் மொழி கொள்கை மட்டுமே கொண்டுள்ளோம். கோவை மாணவி கூட்டு பலாத்காரம் மிகப்பெரிய தலைகுனிவு. இந்த சம்பவம் சட்டங்கள் கடுமையாக இல்லை என்பதை தான் உணர்த்துகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

'எடப்பாடி பழனிசாமி தவழ்ந்து முதல்வரானார் என்பது அவதூறல்ல. அது நடந்த உண்மை. சசிகலா காலில் விழுந்து தான் எடப்பாடி பழனிசாமி பதவி பெற்றார். இப்படி இருக்கும்போது இவர்களில் யாருக்காவது துரோகம், சுயமரியாதை, சமூகநீதி குறித்து பேசுவதற்கு தகுதி உண்டா என்பதை யோசித்து பாருங்கள்' என்று சீமான் தெரிவித்தார். (ஐ)

## திமுக துணை பொதுச்செயலாளர் எண்ணிக்கை 7 ஆக அதிகரிப்பு பொன்முடி, மு.பெ.சாமிநாதனுக்கு பதவி: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு






முன்னாள் அமைச்சர் பொன்முடி, அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கு திமுக துணை பொதுச்செயலாளர் பதவி வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதையடுத்து துணை பொதுசெயலாளர்கள் எண்ணிக்கை தற்போது 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. திமுகவில் துணை பொதுச்செயலாளர்களாக 5 பேர் இருந்து வருகின்றனர்.

அதாவது அமைச்சர் ஐ.பெரியசாமி, எம்பிக்கள் கனிமொழி, அந்தியூர் செல்வராஜ், ஆ.ராசா, திருச்சி சிவா ஆகியோர் அந்த பதவியை வகித்து வருகின்றனர். இந்த நிலையில் துணை பொதுச்செயலாளர் எண்ணிக்கை என்பது 5 என்பது 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2 பொதுச் செயலாளர்கள் புதிதாக நியமித்து திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு: திமுக சட்டதிட்ட விதி 17–பிரிவு:3–ன்படி க.பொன்முடி எம்எல்ஏ, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் திமுக துணைப் பொதுசெயலாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பொன்முடி ஏற்கனவே இந்த பதவியை வகித்துள்ளார். அது மட்டுமல்லாமல் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளராக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜாய் கிரிசில்டாவின் குழந்தைக்கு 'நான்தான் தந்தை' என ஒப்புதல் மாதம்பட்டி ரங்கராஜ் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்: போலீசுக்கு மகளிர் ஆணையம் பரிந்துரை





ஜாய் கிரிசில்டாவின் குழந்தைக்கு நான் தான் தந்தை என்று மாதம்பட்டி ரங்கராஜ் மாநில மகளிர் ஆணையம் நடத்திய விசாரணையில் ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாநில மகளிர் ஆணையம் சென்னை போலீஸ் கமிஷனருக்கு பரிந்துரை செய்துள்ளது. கோவையை சேர்ந்த பிரபல சமையல் கலைஞரான நடிகர் மாதம்பட்டி ராங்கராஜ், இவர் மீது சினிமா ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா என்பவர் கடந்த ஆகஸ்ட் 29ம் தேதி சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் ஒன்று அளித்தார்.


அந்த புகாரில், மாதம்பட்டி ரங்கராஜ், தன்னை இரண்டாவது திருமணம் செய்து கொண்டு, குழந்தை கொடுத்துவிட்டு ஏமாற்றி விட்டதாக புகார் அளித்தார். அந்த புகாரின் மீது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு துணை கமிஷனர் வனிதா விசாரணை நடத்தினர். இந்த விசாரணைக்கு இடையே மாதம்பட்டி ரங்கராஜ் மீது உரிய நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உத்தரவிடும்படி ஜாய் புகார் அளித்தார். அதன்படி மாநில மகளிர் ஆணையர் குமாரி விசாரணை நடத்தினார்.

இந்த விசாரணைக்கு இடையே 9 மாதம் நிறைமாத கர்ப்பமான ஜாய் கிரிசில்டாவுக்கு கடந்த வாரம் வெள்ளிக்கிழமை ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில், குமாரி நடத்திய விசாரணை தொடர்பான தகவல்கள் வெளியானது. அதில் ஜாய் கிரிசில்டாவை காதலித்து திருமணம் செய்து கொண்டது உண்மை என்றும், அவரது வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் தான் தந்தை என்றும் மாதம்பட்டி ரங்கராஜ் ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது.

அவர் ஒப்புக்கொண்டதால், ஜாய் கிரிசில்டாவுக்கு பிறந்த குழந்தைக்கு 'டிஎன்ஏ' பரிசோதனை தேவையில்லை என்றும், இருவரின் வழக்குகள் முடியும் வரை, குழந்தை பராமரிப்பு செலவுக்கு மாதம்பட்டி ரங்கராஜ் மறுக்க கூடாது என ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

அதேநேரம், ஜாய் கிரிசில்டாவை ஏமாற்றிய மாதம்பட்டி ரங்கராஜ் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில மகளிர் ஆணையம் சார்பில் சென்னை போலீஸ் கமிஷனருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதற்கான கடிதத்தையும் மாநில மகளிர் ஆணையம் சார்பில் சென்னை போலீஸ் கமிஷனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரம், மாநில மகளிர் ஆணையம் பரிந்துரை தொடர்பான முக்கிய தகவல்களை ஜாய் கிரிசில்டா தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சூரியனாக மாற முடியாத நிலவு!



ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு ஆளானால் அதை நிரூபிக்கவேண்டியது அவளுடைய முழுப் பொறுப்பு என்கிறது கிங் வம்சத்து சீனாவில் 1646 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம். அதன்படி, பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான ஒரு பெண் இரண்டு காரியங்களை உடனடியாகச் செய்தாகவேண்டும். நான் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டேன் அதற்கு எந்த வகையிலும் நான் காரணமல்ல என்பதை அவள் தெளிவுபடுத்தவேண்டும். இரண்டாவதாக, நான் என்னால் முடிந்த அளவு உயிரைக் கொடுத்து போராடினேன் அதை மீறிதான் இந்தக் கொடுமை நடந்திருக்கிறது என்று அவள் நீதிபதிகளிடம் நிரூபித்தாகவேண்டும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாலியல் புகாரைச் சுமந்துசெல்லும் ஒரு பெண்ணே முதன்மைக் குற்றவாளியாகக் கருதப்பட்டாள். அவள் மீது யாருக்கும் பரிதாபமோ கருணையோ அக்கறையோ பிறக்காது. மாறாக, சமூகம் அவளைத்தான் குற்றவாளிக்கூண்டில் கொண்டுவந்து நிறுத்தும். அவளைத்தான் குறுக்கு விசாரணை செய்யும். யார், எங்கிருக்கிறாள், என்ன செய்கிறாள், குடும்பப் பின்னணி என்ன என்பதையெல்லாம் எடைபோடுவார்கள். புகார் அளிக்கும் அளவுக்கு அந்தப் பெண்ணுக்குத் தகுதி இருக்கிறது என்பதை உறுதிசெய்துகொண்ட பிறகுதான் அவள் தரப்பைக் கேட்கவே தொடங்குவார்கள். சம்பந்தப்பட்ட பெண் 'நடத்தை சரியில்லாதவள்' என்றோ 'மதிப்பில்லாதவள்' என்றோ கருதப்பட்டால் அவள் போதுமான நிரூபணங்களை வழங்கினாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிடும். அடக்கமான, நன்னடத்தைகள் கடைபிடிக்கும் பெண்ணாக இருந்தால் மட்டுமே ஒருவர்மீது குற்றச்சாட்டைக்கூடச் சுமத்தமுடியும். அதற்குப் பிறகு மேலே சொன்னபடி அவள் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையைத் தக்கமுறையில் நிரூபிக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை அவமானப்படுத்துகிறோம் என்ற உணர்வே இல்லாமல் கேள்விகளை வீசியெறிவார்கள். உதாரணத்துக்குச் சில. அதுவரை நீ என்ன செய்துகொண்டிருந்தாய்? ஏன் உன் உடலில் போதுமான காயங்களோ ஊனங்களோ காணப்படவில்லை? நீ முழு மனதுடன் அந்த ஆணுடன் சண்டையிடவில்லையா என்ன? ஏன் தற்கொலை எண்ணம் உனக்கு ஒருமுறைகூட ஏற்படவேயில்லை? இது உனக்கே அசாதாரணமானதாகத் தோன்றவில்லையா?

பிறகு சம்பந்தப்பட்ட பெண்ணின் ஆடைகள் கிழிந்திருக்கின்றனவா என்று பரிசோதிக்கப்படும். அவள் தன் மானத்தைக் காக்க கூக்குரல் இட்டாளா என்பது ஊர்ஜிதப்படுத்தப்படும். அப்படிக் குரலெழுப்பியிருந்தால் அதைக் காதால் கேட்ட அக்கம்பக்கத்தினர் இருக்கவேண்டும் என்றும் அவர்களில் ஒருவராவது ஆஜராகி சாட்சி சொல்லவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படும். ஆடை கிழிந்திருக்கவில்லை, சாட்சியும் இல்லை என்றால் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாகவே இருந்தாலும் அவள் மனு நிராகரிக்கப்படுவதோடு அவள் மீதே சந்தேகம் திரும்பிவிடும். பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான அந்தப் பெண்ணே இப்போது பாலியல் குற்றம் இழைத்த குற்றவாளியாக மாற்றப்பட்டுவிடுவாள். நடைபெற்ற குற்றத்தில் அவளுக்கும் பங்கு உண்டு என்று முடிவு செய்யப்படும். 'முறையற்ற உறவில்' ஈடுபட்ட காரணத்துக்காக அவளுக்குத் தண்டனையும் விதிக்கப்படும்.

சாட்சியும் கிடைத்து, எல்லா எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்து, எல்லா நிரூபணங்களும் உண்மையே என்று ஏற்றுக்கொள்ளப்படுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது அந்தப் பெண்ணுக்கு நீதி வழங்கப்படுமா? உறுதியாகச் சொல்ல முடியாது. காரணம் குற்றம்சாட்டப்பட்ட ஆணும் அதே நீதிமன்றத்துக்கு வரவழைக்கப்படுவான். அவனுடைய தரப்பு விளக்கமும் கேட்டுப் பெறப்படும். நான் குற்றமிழைக்கவில்லை, நான் ஓர் அப்பாவி என்றுதான் அந்த ஆண் எப்படியும் சாதிக்கப்போகிறான். சரி, இப்போது நீதிபதிகள் என்ன செய்வார்கள்? ஆணின் வாதத்தையே ஏற்றுக்கொள்வார்கள். ஏனென்றால் ஒரு பெண்ணின் வார்த்தைகளைவிட ஓர் ஆணின் வார்த்தைகள் பலமிக்கவை. ஒரு பெண் சொல்வதை வைத்துப் போகிறபோக்கில் ஓர் ஆணைத் தண்டித்துவிடமுடியுமா என்ன? இது தவறு என்றோ அநீதி என்றோ அன்றைய சமூகம் கருதவில்லை. இதுவே நடைமுறை என்றும் இதுவே நீதி என்றும் அவர்கள் நம்பினார்கள். நீதிபதிகள் மட்டுமல்ல மக்களும்தான்.

எனில், பாதிக்கப்பட்ட பெண் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும்? ஒரு வழி இருக்கிறது. தற்கொலை. 'அசுத்தமான உடலை' வைத்துக்கொண்டு தன் எஞ்சிய வாழ்வை அவள் கடப்பதென்பது மரணத்தைக் காட்டிலும் கொடுமையானது என்பதால் சட்டத்தால் கைவிடப்பட்ட பெண்கள் தற்கொலையை நாடுவது வழக்கமாக இருந்தது என்கின்றன இந்தக் காலகட்டத்து சமூகச் சூழலை ஆராயும் நூல்கள். பலர் சட்டத்தின் உதவியை நாடுவதற்குமுன்பே தற்கொலையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எப்படியும் நீதி கிடைக்கப்போவதில்லை. பிறகு எதற்காகப் பாலியல் குற்றச்சாட்டுடன் நீதிமன்றத்தின் படிகளை ஏறவேண்டும்? எதற்காக ஆயிரத்தெட்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டும்? எங்கிருந்து போய் சாட்சிகளைக் கண்டுபிடித்து கூட்டிப்போகமுடியும்? இவ்வளவும் செய்தாலும் என் மானமும் குடும்பத்தின் மானமும் போகப்போவது உறுதி என்னும் நிலையில் நான் ஏன் வாழவேண்டும?

பலாத்காரத்துக்கு ஆளாகும் பெண்கள் தற்கொலை செய்துகொள்வதைச் சமூகம் பெரிய மனம் கொண்டு ஏற்றுக்கொண்டது. தற்கொலை செய்துகொண்ட பெண்களை மரியாதையுடன் போற்றும் வழக்கமும் இருந்திருக்கிறது. அதே போல், பாலியல் பலாத்காரத்தை எதிர்த்துப் போராடி உயிரைவிடும் பெண்களையும் கிங் காலகட்டத்துச் சமூகம் மரியாதையுடன் வணங்கியிருக்கிறது. தன்னுடைய மகத்தான மரணத்தின்மூலம் தன்னுடைய மானத்தையும் தன் குடும்பத்தின் மானத்தையும் அவள் மீட்டெடுத்துவிட்டதாக அவர்கள் கருதினார்கள். மானத்தை இழப்பதைவிட உயிரைவிடுவது மேலானது என்று பெண்களுக்குப் போதிக்கப்பட்டது. ஒரு பெண்ணின் விரும்பத்தக்க பண்புகளில் இப்படி மானத்துக்காக உயிரை விடுவது முக்கியமான இடத்தை வகிக்கிறது.

'அசுத்தமடைவதற்கு முன்பே' தற்கொலை செய்துகொள்ளும் பெண்களுக்கு இன்னமும் மேலான இடம் அளிக்கப்படுகிறது. அதாவது, ஓர் ஆண் தன்னை அடைய விரும்புகிறான் என்பதை அவனுடைய செய்கைகளைக் கொண்டு முன்கூட்டிய உணர்ந்து அவனிடமிருந்து தப்பிக்க ஒரு பெண் தற்கொலையை நாடும்போது அவளுடைய வீரமும் தீரமும் சமயோசித அறிவும் பாராட்டப்படும். எவ்வளவு விழிப்புடன் செயல்பட்டுத் தன் மானத்தை அவள் காத்துக்கொண்டாள் பார்த்தாயா என்று பேசிப் பேசி மாய்ந்துபோவார்கள். மொத்தத்தில், எல்லாப் பெண்களுக்கும் தற்கொலையே சிறப்பான தீர்வாக இருந்திருக்கிறது. 1646 ஆம் ஆண்டு சீனச் சட்டமும் ஒரு வகையில் பெண்களைத் தற்கொலைக்கே தூண்டிவிடுகிறது என்று சொல்லலாம்.

சாங் வம்சத்து சீனாவைச் சேர்ந்த புகழ்பெற்ற வரலாற்றாசிரியர், சிமா குவாங் (1019 1086). ஆண்களும் பெண்களும் கடைபிடிக்கவேண்டிய நீதிநெறிகளை இவர் வகுத்து அளித்திருக்கிறார். அதற்கான முழுத் தகுதியும் அவருக்கு இருக்கிறது என்று சீனர்கள் கருதினார்கள். அதற்கோர் உதாரணத்தையும் அவர்கள் சொல்வார்கள். சிமா குவாங்குக்கு ஆண் வாரிசு இல்லை. அதனால் கலக்கமடைந்த அவர் மனைவியும் அவர் தங்கையும் சேர்ந்து மற்றொரு பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். ஆனால், சிமா குவாங் அந்தப் பெண்ணைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவரை வழிக்குக் கொண்டுவர அவர் மனைவியை ஊருக்கு அனுப்பிவைத்தார்கள். இப்போது வீட்டில் அந்தப் புதிய பெண் மட்டுமே இருந்தார். ஒரு நாள் அந்தப் பெண் தன்னை நன்றாக அழகுபடுத்திக்கொண்டு தேநீருடன் அவர் அறைக்குச் சென்றார். சிமா குவாங் கோபத்துடன் சீறிவிட்டார். ' எஜமானி வீட்டில் இல்லாதபோது நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'

குடும்ப வாழ்க்கைக்கான கட்டளைகள் என்னும் தலைப்பில் அவர் நூலொன்றை எழுதினார். ஆண்களும் பெண்களும் எப்படி வாழவேண்டும், அவர்கள் வளர்த்துக்கொள்ளவேண்டிய பண்புகள் என்னென்ன, அவர்களுடைய கடமைகள் என்னென்ன போன்றவற்றை அவர் தன்னுடைய நூலில் தொகுத்துள்ளார். உலகம் குடும்பங்ளால் ஆனது. ஒவ்வொரு குடும்பமும் ஜியா என்று அழைக்கப்படும். ஒரு குடும்பத்தின் அடிப்படை ஒற்றுமை. அப்பா, தாத்தா, சித்தப்பா என்று தொடங்கி குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையாக ஓரிடத்தில் சேர்ந்து வாழவேண்டும். வீடு, தோட்டம், நிலம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்து அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். வீண் ஆடம்பரம், செலவுகள் இன்றி சிக்கனமாக குடும்பத்து உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்கிறார் சிமா குவாங்.

ஆண்களின் உலகமும் பெண்களின் உலகமும் தனித்தனி என்றாலும் ஒரு ஜியாவில் இந்த இரு உலகும் இணைந்திருக்கின்றன. ஆண்களை மையமாகக் கொண்டு இயங்கும் குடும்பத்தில் பெண்கள் தங்களை இணைத்துக்கொள்கிறார்கள். மனைவிகளாக, சகோதரிகளாக, மகள்களாக. இந்தப் பெண்கள் அந்தக் குடும்பத்தின் போக்கைத் தீர்மானிப்பவர்களாக மாறுகிறார்கள். ஆண்களை அவர்களால் பெருமளவில் கட்டுப்படுத்தமுடியும். அவர்களுடைய சிந்தனைகளை வசப்படுத்தமுடியும். ஆண்களைப் போலவே பெண்களால் ஒரு குடும்பத்தை வளர்க்கவோ சிதைக்கவோ முடியும். ஒரு ஜியா மகிழ்ச்சியாக இருக்க ஆண்களைப் போலவே பெண்களின் பங்களிப்பும் அவசியம். ஆண்களைப் போல் பெண்களும் சில குறிப்பிட்ட குணநலன்களைப் பெற்றிருக்கவேண்டும் என்கிறார் சிமா குவாங். இவை இருந்தால்தான் ஒரு ஜியா சீராகச் செயல்படும்.

ஒரு சம்பவத்தை அல்லது கதையை விவரிக்கிறார் சிமா குவாங். யூ என்றொரு பெண் இருந்தாள். அவள் தன் 14 ஆவது வயதில் ஹான் ஜி என்பவனைத் திருமணம் செய்துகொண்டாள். அவளுக்கு 18 வயது ஆனபோது ஹான் ஜி இறந்துவிடுகிறான். யூ துக்கத்தில் மூழ்கிப்போனாலும் தன் கணவனுக்கான சடங்குகள் அனைத்தையும் முன்னின்று நடத்துகிறாள். துக்கத்தில்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# அமெரிக்க அரசின் நிதி முடக்க நிலை: கட்டாய விடுப்பில் 6.70 லட்சம் அரசு ஊழியர்கள் ஊதியமின்றி பணிபுரியும் 7.30 லட்சம் பணியாளர்கள்!!



அமெரிக்க அரசின் நிதி முடக்க நிலை 35வது நாளை எட்டிய நிலையில், ஊதியம் கிடைக்காமல் ஊழியர்கள் பலர் கட்டாய விடுப்பில் சென்றுள்ளனர். ஆள்பற்றாக்குறை எதிரொலியாக முக்கிய துறைகளின் சேவைகள் முடங்கி உள்ளன. அமெரிக்க அதிபராக 2வது முறையாக பதவியேற்றது முதலே பல்வேறு அதிரடிகளை காட்டி வருகிறார் டொனால்ட் டிரம்ப். குறிப்பாக உலக நாடுகள் மீது பரஸ்பர வரி விதிப்பு, குடியேற்றச் சட்டத்தில் கடுமை, 'எச் 1 பி' விசாவில் கெடுபிடி உள்ளிட்ட விவகாரங்களில் நடவடிக்கை எடுத்துள்ளார். அரசுக்கு தேவையான நிதியை விடுவிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டதால், நிதி விடுவிப்பு தடைப்பட்டுள்ளது. இதனால் அமெரிக்க அரசின் முக்கிய துறைகள் அனைத்தும் முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவைகளில் பணிபுரியும் பணியாளர்கள் ஊதியமின்றி பணியாற்ற வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாகி உள்ளனர். ஊழியர்கள் பலர் விடுப்பில் சென்றுள்ளதால் அத்தியாவசிய பணிகள் முடங்கியுள்ளன. தொடர்ந்து, 35வது நாளாக அரசு துறைகளுக்கு செலவழிக்க பணம் வழங்கப்படவில்லை.

கடந்த 2018-2019ல் ட்ரம்பின் முந்தைய ஆட்சியிலும் இது போல் நிதி முடக்கம் ஏற்பட்டது. அரசின் பல சேவைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விமான சேவையும் முடங்கியுள்ளது. நிதி முடக்கத்தால் 6.70 லட்சம் அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் உள்ளனர். அமெரிக்காவில் 7.30 லட்சம் அரசு ஊழியர்கள் ஊதியமின்றி பணிபுரிந்து வருகின்றனர். (ஐ)

## டிரம்ப்பையே அலறவிட்ட மம்தானி.. நியூயார்க் மேயராக முதல் இந்திய வம்சாவளி தேர்வு!




நியூயார்க் மேயர் தேர்தலில் இந்திய வம்சாவளியைச்சேர்ந்த சோரன் மம்தானி வெற்றி பெற்றுள்ளார். அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயராக இருந்தவர் எரிக் ஆடம்ஸ். இவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டு எழுந்த நிலையில், அவர் தனது மேயர் பதவியை ராஜினாமா செய்தார். அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் பதவிக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பாக இந்திய வம்சாவளியான ஸோரான் மம்தானி (வயது 34), குடியரசுக் கட்சியின் சார்பாக கர்டிஸ் ஸ்லிவா, முன்னாள் கவர்னர் ஆண்ட்ரூ குவோமோ ஆகியோர் போட்டியிட்டனர்.

இதனையடுத்து புதிய மேயரை தேர்வு செய்யும் தேர்தல் நேற்று நடைபெற்றது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் ஜோஹ்ரான் மம்தானியும், குடியரசு கட்சி வேட்பாளர் கர்டிஸ் ஸ்லிவாவும் முன்னிலை வகித்து வந்தனர். மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றான நியூயார்க் மேயர் தேர்தல் அமெரிக்க அரசியலிலும் பிரதிபலிக்கும் என்பதால் இது பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த தேர்தலில் அமெரிக்க குடியரசு தலைவர் டிரம்பை கடுமையாக விமர்சித்து வரும் மம்தானியே வெற்றி பெறுவார் என கருத்து கணிப்புகள் தெரிவித்திருந்தன.

ஆனால் டிரம்ப் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். நியூயார்க் மேயராக மம்தானி வென்றால் நியூயார்க் பொருளாதார, சமூக பேரழிவு ஏற்பட்டு நிலைமை மோசமாகி விடும். இதனால் நியூயார்க் நகரத்துக்கு அதிக நிதி ஒதுக்க முடியாது என்று டிரம்ப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில் மேயர் பதவிக்கான தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளரை வீழ்த்தி ஜனநாயக கட்சியின் ஜோஹ்ரான் மம்தானி அபார வெற்றி பெற்றுள்ளார். அமெரிக்காவின் நியூயார்க் நகர முதல் முஸ்லீம் மேயர் மற்றும் முதல் இந்திய வம்சாவளி மேயர் என்ற பெருமையை ஜோஹ்ரான் மம்தானி பெற்றுள்ளார். (ஐ)

## ஆங்கில மொழி பேச தெரியாததால் அமெரிக்காவில் 7,200 டிரைவர்கள் வேலையிழப்பு

அமெரிக்காவில் ஆங்கில மொழித் தேர்வில் தோல்வியடைந்ததால், இந்தியர்கள் உட்பட ஆயிரக்கணக்கான லாரி ஓட்டுநர்கள் பணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் வர்த்தக ரீதியான லாரி போன்ற கனரக வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்கள், பொதுமக்களுடன் உரையாடவும், சாலை விதிக் குறியீடுகளைப் புரிந்துகொள்ளவும், போக்குவரத்து போலீசிடம் பேசவும், பதிவேடுகளைப் பராமரிக்கவும் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாய விதியாகும்.

இந்திய வம்சாவளி ஓட்டுநர்கள் சம்பந்தப்பட்ட சில கோரமான நெடுஞ்சாலை விபத்துகளுக்குப் பிறகு, மொழிப் பிரச்னை மற்றும் உரிமம் வழங்கும் தரநிலைகள் குறித்த கவலைகள் எழுந்ததால், இந்த விதி தற்போது மிகத் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கடுமையான நடவடிக்கையின் விளைவாக, இந்த ஆண்டு மட்டும் சாலையோர ஆங்கில மொழித் தேர்வில் தோல்வியடைந்த 7,200க்கும் மேற்பட்ட லாரி ஓட்டுநர்கள் உடனடியாகப் பணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக அமெரிக்கப் போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்றும், குறிப்பாக பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. இதுகுறித்து வட அமெரிக்க பஞ்சாபி டிரக்கர்ஸ் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. ஆனால், இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்கப் போக்குவரத்துத் துறைச் செயலாளர் சீன் டஃபி, 'சாலைப் பாதுகாப்பிற்கு ஆங்கில மொழிப் புலமை அவசியம்' என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். (ஐ)



## நள்ளிரவில் கரையை கடந்தது பிலிப்பைன்சை புரட்டிப் போட்டது கல்மேகி புயல்: 26 பேர் பலி



பசிபிக் பெருங்கடலில் உருவான கல்மேகி புயல் மத்திய பிலிப்பைன்சில் நள்ளிரவு கரையை கடந்தது. அப்போது சூறாவளியுடன் கனமழை கொட்டியதால் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. 26 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பசிபிக் பெருங்கடலில் உருவான கல்மேகி புயல், பிலிப்பைன்சின் மத்திய பகுதியை நோக்கி நகர்ந்தது. இந்த புயல் நேற்று முன்தினம் நள்ளிரவு கரையை கடந்த போது, நீக்ரோஸ் ஆக்சிடென்டல், சிபு, தெற்கு லெய்டீ உள்ளிட்ட மாகாணங்கள் கடும் சேதத்தை சந்தித்தன. மணிக்கு 140 கிமீ முதல் 195 கிமீ வரையிலும் பலத்த சூறைக்காற்று வீசியது. கனமழை கொட்டியதால் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. செபு மாகாணத்தில் உள்ள மண்டாவ் நகரில் ஆள் உயரத்திற்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மக்கள் பலரும் உயிர் தப்பிக்க வீட்டின் கூரையில் தஞ்சமடைந்தனர்.

கிழக்கு சமரில் பலத்த காற்று வீசியதால் கார்கள் தூக்கி வீசப்பட்டன. ஹோமோன்ஹாஜ் தீவில் 300க்கும் மேற்பட்ட கிராமப்புற குடிசை வீடுகள் கடும் சேதமடைந்தன. புயல் கரை கடந்த பின் நேற்று காலை மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் பல பகுதிகளில் வெள்ளம் அதிக அளவு இருப்பதால் தண்ணீர் வடிந்த பிறகே மீட்பு பணிகள் செய்ய முடியும் என அதிகாரிகள் கூறினர். பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது. புயலில் முறிந்து விழுந்த மின் கம்பங்கள் சரி செய்யும் பணி நடக்கிறது. புயலால் 26 பேர் பலியானதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. புயலுக்கு முன்பாக கிழக்கு பிலிப்பைன்ஸ் மாகாணத்தில் முன்னெச்சரிக்கையாக 1.50 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் முகாம்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டதாக பேரிடர் மீட்பு படையினர் கூறி உள்ளனர்.

பிலிப்பைன்சில் இந்த ஆண்டு ஏற்பட்ட 20வது புயல் கல்மேகி. அந்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 புயல்கள் தாக்கக் கூடும்.

அங்கு, 12க்கும் மேற்பட்ட வெடிக்கக் கூடிய எரிமலைகள் உள்ளன.

உலகின் மிகவும் பேரழிவு ஏற்படக்கூடிய நாடுகளில் ஒன்றாக பிலிப்பைன்ஸ் உள்ளது. (ஐ)

## மனைவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தார். அந்தப் பெண்ணின் தாயார் பணி நிமித்தம் வெளியில் சென்றுவிட்டு மாலை வீட்டுக்குச் சென்று பார்த்தபோது தனது மகள் இரத்த வெள்ளத்தில் சடலமாகக் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டார்.

பெண்ணின் கழுத்துப் பகுதியில் கணவர் கூரிய ஆயுதத்தால் வெட்டியமையால் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, பெண்ணின் கணவர், அவரது இரண்டு வயது பெண் குழந்தையுடன் தலைமறைவாகி இருந்தார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், சந்தேகநபரான கணவர் நேற்று இரவு தனது குழந்தையுடன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## குளவித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மரத்தில் இருந்த பப்பறக்கொட்டான் குளவிகள் கலைந்து வீதியால் சென்ற மாணவர்கள் மீது தாக்கியுள்ளது.

இதில் பாதிப்படைந்த 12 மாணவர்கள் நெடுங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாசிப்பு விவாதம் நடைபெற்று 14 ஆம் திகதி அதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். அதற்குப் பிறகு குழுக்கள் மட்டத்தில் விவாதம் நடைபெறும். அதைத் தொடர்ந்து மூன்றாம் வாசிப்பு இடம்பெற்று அதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். இந்த விடயத்தை நாங்கள் மிகவும் தீவிரமாக ஆராய்ந்தோம். நாடாளுமன்றக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய நிலைப்பாடுகளை அல்லது தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள்.

மத்திய செயற்குழு உறுப்பினர்களும் இன்றைய சூழ்நிலையிலே நாங்கள் என்னவிதமாக இதனை அணுக வேண்டும் என்கின்ற தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். இறுதி முடிவு எதுவுமே எடுக்கப்படவில்லை.

நாங்கள் ஜனாதிபதி தன்னுடைய யோசனைகளை எதிர்வரும் 7ஆம் திகதி முன்வைத்த பிறகு இரண்டாம் வாசிப்பு முடிவடைவதற்கு முன்னதாக எங்களுடைய அரசியல் குழுவோடு நாடாளுமன்றக் குழுவும் இணைந்து வாக்களிப்பில் எப்படிக் கலந்துகொள்வது என்பது சம்பந்தமான இறுதி முடிவெடுப்பது எனத் தீர்மானித்திருக்கின்றோம்.

அதைத் தொடர்ந்து நாங்கள் மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளோடு இணைந்து செயற்படுகின்ற விடயம் சம்பந்தமாகப் பேசப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு தலைவரும் நானும் ஏற்கனவே சில சந்தர்ப்பங்களில் உரையாடி இருக்கின்றோம். அது சம்பந்தமாக எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம். அந்த நிலைப்பாட்டில் அவர்களும் இணங்கி வருவார்களாக இருந்தால் நாங்கள் முன்னர் இருந்ததைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரோடு இணங்கிச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகவே, அப்படியாக இணங்கிச் செயற்பட முன்வருமாறு நாங்கள் அவர்களுக்கு அழைப்பும் விடுக்கின்றோம். மத்திய செயற்குழுவிலே அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரோடும் நாங்கள் இது சம்பந்தமாக பேசலாமா என்ற விடயமும் எடுத்துக்கொள்ளப்பட்டது. சகல தமிழ்த் தரப்புக்களோடும் பிரதான தலைமைத் தமிழ்க் கட்சி என்ற ரீதியில் நாங்கள் அனைவரையும் இணைந்து செயற்படுமாறு அழைத்து விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரோடு வைத்தியர் சத்தியலிங்கம் சுவிஸ் விஜயத்தின் போது சம்பாசனைகளில் ஈடுபட்டிருக்கின்றார். அது பற்றி எங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக ஒரே நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் முன்வைக்குமா என்கின்ற ஒரு கேள்வி இருக்கின்றது. ஆகவே, அது சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இறுதியாகக் கோட்டாபய ராஜபக்ஷ அரச காலத்தில் அபாபோதைய குழுவுக்கு முன்வைத்த யோசனை ஒன்று இருக்கின்றது. அதுதான் நாங்கள் இறுதியாக ஓர் அரசுக்கு முன்வைத்த யோசனை. நாங்கள் அதனை மற்றவர்களுக்கும் காண்பிப்பது என்று தீர்மானித்திருக்கின்றோம். அவர்கள் அதில் இணங்கி வருவார்களாக இருந்தால் அதை ஒரு பொது நிலைப்பாடாக நாங்கள் அரசுக்குத் தெரிவிக்க முடியும் என்று தீர்மானித்திருக்கின்றோம்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் தமிழரசுக் கட்சி ஒரு கோரிக்கை விடுத்திருக்கின்றது. எப்படியான விடயங்களை நாம் கதைப்பது என இதற்கு முன்னர் நடந்த மத்திய செயற்குழுவிலே எடுத்த தீர்மானத்தின் அமைவாக தலைவரும் நானும் கையெழுத்திட்டு அரசியல் தீர்வு சம்பந்தமாக அவரோடு பேசுவதற்கு எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாம் இருவரையும் (தலைவர், செயலாளர்) சேர்த்து பத்து பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும், நேரம் ஒதுக்கித் தருமாறும் நாங்கள் அவரிடத்திலே கோரிக்கை விடுத்திருந்தோம்.

அந்தக் கடிதம் அவருக்கு அனுப்பி வைக்கப் போகும்போது அவர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையிலே கலந்துகொள்வதற்காக வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார். ஆகவே, அவர் திரும்பி வந்த பிறகு ஒரு நினைவூட்டல் கடிதமும் நான் அனுப்பி இருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் எந்தவிதமான பதிலும் ஜனாதிபதியிடத்திலிருந்து எங்களுக்குக் கிடைக்கவில்லை.

எனினும் எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பேரணியை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. நாங்கள் அதில் பங்கேற்கவும் மாட்டோம்.

இதற்கு முன்னர் பல தடவைகளிலே பல்வேறு எதிர்க்கட்சிகள் சேர்ந்து செயற்படுகின்ற போது எங்களுக்கு அழைப்புகள் விடுப்பார்கள். நாங்கள் சில வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக இணைந்து பணியாற்றுகின்றோம். மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று சில வேலைத்திட்டங்களிலே எங்களோடு இணைந்து வருகின்றவர்களோடு சேர்ந்து பயணிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், பொதுவாக ஓர் எதிர்க்கட்சிக் கூட்டணியாக ஒன்று சேர்ந்து பயணிக்கத் தயாராக இல்லை." - என்றார்.

## கஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்பிரகாரம், 2028 முதல் கடன் திருப்பிச் செலுத்த ஆரம்பிக்கும் போது, ஐ.எம்.எவ். வேலைத்திட்டத்துக்குப் பிந்தைய காலகட்டத்தில் எதிர்பார்க்கப்படும் சவால்களையும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோடிட்டுக் காட்டினார். இதன் பொருட்டான பிராந்திய முதலீடு மற்றும் ஒத்துழைப்பால் ஆதரிக்கப்படும் ஒரு நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயத்தின் அவசியப்பாடு தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வர்த்தகம், எரிசக்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இங்கு பல யோசனைகளை இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டன.

மேலும், இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் கொள்ளவுத் திறனை விரிவுபடுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதோடு, வலயமைப்பு தொடர்புகளை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்தார்.

பூட்டான் மற்றும் நேபாளத்துடனான இந்தியாவின் வெற்றிகரமான கூட்டாண்மையைப் பயன்படுத்திக் கொண்டு, மின்சாரம் மற்றும் எரிசக்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பில் ஆராயும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்திய வெளியுறவு அமைச்சு வசதிகளைச் செய்து தரும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் இதன்போது உறுதியளித்தார்.

சமுத்திர, விமான இணைப்புச் சேவைகள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள இரு நாடுகளிடையேயான மின்சார இணைப்புக் கட்டமைப்பின் இடைத் தொடர்புகள் உள்ளிட்ட முக்கிய ஒத்துழைப்பு முயற்சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு மதிப்பாய்வு செய்தனர்.

பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையையும், கடல்சார் போக்குவரத்தின் சுதந்திரத்தையும் பேணிச் செல்வதற்கு இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தை உணர்ந்து, பிராந்திய பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் கண்டு வரும் இந்தியப் பெருங்கடல் சார் பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கத்தில் இலங்கையின் வகிபாகம் குறித்தும் இவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மூலோபாய சமநிலை மற்றும் சுயாதீனத்தைப் பேணிக் கொண்டு, அனைத்து பங்குதாரர்களுடனும் வெளிப்படையாக தொடர்புகளைப் பேணி, நடைமுறைக்கு ஏற்ற அணிசேரா கொள்கைக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் உறுதிப்படுத்தினார். இங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இந்த அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு, இலங்கையின் ஸ்திரத்தன்மை இந்தியாவின் சொந்த பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கு அவசியமாக அமைந்து காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

# சூரியனாக...

இருக்கும் ஒரு பெண் என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்றவேண்டுமோ அவை அனைத்தையும் பின்பற்றுகிறாள். சடங்குகள் முடிவடைகின்றன. யூவின் பெற்றோர் அவளை இன்னொரு திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்கள். உன் இளமையை எதற்காக வீணடிக்கவேண்டும்? நீயும் மற்ற பெண்களைப் போல் திருமணம் செய்துகொள், குழந்தை பெற்றுக்கொள், மகிழ்ச்சியாக இரு என்று அறிவுறுத்துகிறார்கள்.

ஆனால், யூ மறுத்துவிடுகிறாள். கணவனை இழந்த பெண் கடைபிடிக்கவேண்டிய ஒழுக்கத்தை என் வாழ்நாள் முழுக்க நான் கடைபிடிப்பேன் என்று கண்டிப்புடன் சொல்லிவிடுகிறாள். அன்றுமுதல் அவள் தன்னை அழகுபடுத்திக்கொள்ளவில்லை. வீட்டுக்கு யாராவது விருந்தினர்கள் வந்தால்கூட அவள் கதவைத் திறந்து அவர்களை வரவேற்கவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைந்துகிடந்தாள். தன் வாழ்நாளின் இறுதிவரை யூ மாமிச உணவை விலக்கிவைத்து மரக்கறி மட்டுமே எடுத்துக்கொண்டாள். பூ வேலைப்பாடுகள் இல்லாத எளிய ஆடைகளையே உடுத்திக்கொண்டாள். இசையைக் கேட்பது ஒரு வகையான கொண்டாட்டம் என்பதால் தன் கணவன் இறந்த தினம் தொடங்கி இசையைக் கேட்பதையே அவள் நிறுத்திக்கொண்டாள்.

இத்தனைக்கும் யூ பெரிய இடத்து குடும்பத்தைச் சேர்ந்தவள். பணக்காரி. இருந்தாலும் தன் பெற்றோரின் அறிவுரைகளை மட்டுமின்றி பெற்றோரையும் சேர்த்தே புறக்கணித்துவிட்டு தன் கணவனின் குடும்பத்துடன் ஒட்டிக்கொண்டுவிடுகிறாள். திருமணத்துக்குப் பிறகு ஒரு பெண் தன் தாய்வீட்டுத் தொடர்புகளை முறித்துக்கொள்ளவேண்டும் என்றும் கணவன் இறந்துபோனாலும் புகுந்த வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்றும் பெரியோர்கள் சொல்லியிருப்பதால் யூ அந்த விதிகளைக் கடைபிடிக்கிறாள். அதனாலேயே யூ அவளுடைய சமூகத்தின் மதிப்பையும் மரியாதையையும் சம்பாதித்துக்கொண்டாள்.

இந்தக் கதை அல்லது நிஜ சம்பவம் மூலம் சிமா குவாங் ஒரு பெண்ணின் மதிக்கத்தக்க சில பண்புகளைத் தெளிவாக முன்னிறுத்துகிறார். ஓர் ஆணின் பண்புகளும் பெண்ணின் பண்புகளும் வெவ்வேறானவை என்கிறார் அவர். ஆண் என்பவன் சொர்க்கம் என்றால் பெண் என்பவள் பூமி. ஆண் சூரியன் என்றால் பெண் நிலவு. ஆண் யாங் என்றால் பெண் யின். சொர்க்கம் மேலே இருக்கிறது, பூமி தரையில். ஓர் ஆண் கற்பனையில் திளைத்திருக்கலாம் ஆனால், ஒரு பெண் எப்போதும் தன் கால்களை நிலத்தில் ஆழமாகப் புதைத்து வைத்திருக்கவேண்டும். நடைமுறை சாத்தியங்களை மட்டுமே அவள் பின்பற்றவேண்டும். சொர்க்கம் கனவுகளால் ஆனது. அங்கே எல்லா இன்பங்களும் கிடைக்கும். அங்கே சரி, தவறுகள் கிடையாது. ஆனால், பூமி என்பது விதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் உருண்டை. இந்த விதிகள் பெண்களைப் பற்றிக்கொண்டிருக்கின்றன. பெண்களைச் சுற்றி இயங்கி வருகின்றன. பெண்கள் பூமியின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும். இறப்பதாக இருந்தாலும் அந்த விதிகளுக்குக் கட்டுப்பட்டே இறக்கவேண்டும்.

ஓர் ஆண் பண்புள்ளவனாகவும் இருந்தால் அவனுடைய இயல்பு வியக்கப்படுகிறது. தன் மனைவி இல்லாதபோதும் இன்னொரு பெண்ணை ஏறெடுத்துப் பார்க்காத சிமா குவாங் புகழப்படுவது அதனால்தான். அதே நேரம் ஒரு பெண் புகழப்படவேண்டுமானால் அவள் தன் 'கற்பைப் போற்றுபவளாக', அதற்காக உயிரைக் கொடுப்பவளாக இருக்கவேண்டும். வசதியும் வாய்ப்பும் இருந்தாலும் யூ போல வாழ்நாள் முழுக்கத் தன்னை வருத்திக்கொள்பவளாக இருக்கவேண்டும். ஜியாவின் விதிகளையும் உலகின் விதிகளையும் காப்பாற்றுபவளாக இருக்கவேண்டும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்தால்தான் ஜியா உருவாகிறது. யாங், யின் இரண்டும் சேர்ந்தால்தான் முழுமை கிடைக்கிறது என்கிறார் சிமா குவாங். அதே நேரம் யாங், யின் இரண்டும் சமமானவையல்ல என்றும் அவர் மறக்காமல் நினைவுபடுத்துகிறார். எவ்வளவு முயன்றாலும் ஒரு நிலவு சூரியனாக மாறவே முடியாது. எவ்வளவு முயன்றாலும் பூமி சொர்க்கமாகாது. இந்த அடிப்படை விதிகளை ஆண்களைப் போலவே பெண்களும் ஏற்றுக்கொண்டுவிட்டால் எல்லா ஜியாக்களும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்று எளிமையாகத் தன் உபதேசங்களை முடித்துக்கொள்கிறார் சிமா குவாங்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமை, துன்கிந்த, ராவணா, ரம்போடை உட்பட 10க்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!